உ

சிவமயம்



துதி

வானுலகும் மண்ணுலகும்வாழ மறைவாழ
பான்மைதகு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத மைந்துமுக மூன்றுவிழி நால்வாய்
யானைமுகனைப் பரவியஞ்சலி செய்கிற்பாம்.

# அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## கேர்ணிங்,டென்மார்க்

## *மஹா கணபதி ஹோம விஞ்ஞாபனம்*

### *13-05-2022 வெள்ளிக்கிழமை*

ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் சித்திரைத்திங்கள் 30ம் நாள் **13-05-2022 வெள்ளிக்கிழமை** அத்தநட்சத்திரமும் துவாதசி திதியும் கூடிய நன்நாளில் எம்பெருமானுக்கு ***மஹா கணபதி ஹோமம்*** நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அன்றைய தினம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஹோமத்திலும் பங்குபற்றி விநாயகப்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

### *கிரியாகால விபரம்*

- ***12-05-22 (சித்திரை 29ம் நாள்) வியாழன் மாலை 6.00 மணிக்கு***
  விநாயக வழிபாட்டுடன் கணபதி ஹோம அனுக்ஞை

- ***13-05-22 (சித்திரை 30ம் நாள் ) வெள்ளி காலை 7-00 மணிக்கு***
  புண்ணியாகவாசனம், கும்பபூஜை, கணபதி ஹோம அக்னி ஆவாகனம், திரவியஹோமம், திரவிய அபிஷேக உபசார பூஜை, மஹா பூரணாகுதி,விசேட கும்பபூஜை,வேத தோத்திர பாராயணம், பிரதான கும்பவீதிவலம், பிரதான கும்ப அபிஷேகத்தை தொடர்ந்து எம்பெருமானுக்கு விஷேட பூஜை நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

**பகல் அன்னதானம் வழங்கப்படும்..**

***தேவஸ்தான குரு: சிவஸ்ரீ. இறையருள் இரத்தின ஜெயமுரளிக்குருக்கள்***

***கௌரவகுரு: சிவஸ்ரீ. உருத்திர ஆதித்தன் குருக்கள்***

*( ஸ்ரீ கற்பகபதி கற்பகவிநாயகர் கோயில்- London)*

***உதவிக் குருமார் : பிரம்மஸ்ரீ. ராஜுராம் முரளிதர சர்மா*** *(London)*

***பிரம்மஸ்ரீ. ஜெ.கீதையன் சர்மா***

*__குறிப்பு:__ பூ பால் பழம் தயிர் பூமாலை, அன்னதான பொருட்கள் முதலியன அன்பளிப்புச் செய்ய விரும்பும் அடியார்கள் உரிய காலத்துக்கு முன்னர் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தொடர்புகளுக்கு : 97225511

இங்ஙனம்
பரிபாலனசபை

**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்** teglvænget -93, 7400 Herning. www.pillayar.dk